DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SULUR

**C.C. No.**1017/2017

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : | Prosecution<br>Defence<br>Court | PW - 3 |
| Name | : | தங்கவேல் | |
| Father's Name/Husband | : | S/o.கேசவன் | |
| Village | : | | |
| T a l u k | : | | |
| Caste | | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed accordance with the provisions of Act X of 1873 of the 21st day of August 2019.

21-08-2019

**முதல் விசாரணை-**

நான் தற்போது சென்னிஆண்டவர் வீதி, கருமத்தம்பட்டியில் குடியிருந்து கூலி வேலைக்கு சென்று வருகிறேன். சென்னிஆண்டவர் கோவில் அருகே தகராறு நடந்தது தொடர்பாக போலீசார் மதியம் 01.00 மணிக்கு வந்து சம்பவ இடத்தை பார்த்து வரைபடம் வரைந்து அது பற்றி தயார் செய்த மகசரில் சாட்சியாக கையொப்பம் செய்தேன். அந்த பார்வைமகசரில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். பார்வைமகசர் **அ.த.சா.ஆ.**2 ஆகும். அதன் பிறகு அங்கிருந்த கல்லை போலிசார் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியபோது மகசரில் சாட்சியாக கையொப்பம் செய்தேன். அந்த கைப்பற்றுதல்மகசரில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.**3 ஆகும்.

**குறுக்கு விசாரணை-**

நான் சம்பவ இடத்தில் 03.00 மணிக்கு இருந்தேன். 03.30 மணிக்கு போலீசார் சம்பவ இடம் வந்துவிட்டார்கள். என்ன வழக்கு என்று போலீசார் என்னிடம் கூறவில்லை. போலீசார் என்னிடத்தில் இரண்டு கையொப்பம் பெற்றார்கள். போலீசார் கையொப்பம் பெற்ற ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதால் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். போலீசார் மெட்டல் கல்

ஒன்றை கைப்பற்றினார்கள். நானும், பார்த்தீபனும் அப்போது உடன் இருந்தோம். குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை-</u>** <u>இல்லை.</u>

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SULUR

**C.C. No.**1017/2017

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : | Prosecution<br>Defence<br>Court | PW - 4 |
| Name | : | பார்த்தீபன் | |
| Father's Name/Husband | : | S/o.மகாலிங்கம் | |
| Village | : | | |
| T a l u k | : | | |
| Caste | | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed accordance with the provisions of Act X of 1873 of the 21st day of August 2019.

21-08-2019

முதல் விசாரணை-

நான் தற்போது சென்னிஆண்டவர் கோவில் வீதியில் குடியிருந்து கூலி வேலைக்கு சென்று வருகிறேன். கடந்த 13.07.2017 ம்தேதி கருப்பராயன் கோவில் அருகே வரும்போது அங்கிருந்த போலீசார் வரைபடம் வடிரைந்து தயார் செய்த மகசரில் கையொப்பம் கேட்டார்கள். நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். பார்வை மகசரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். தொடரந்து போலீசார் கல் ஒன்றை எடுத்து அவர் தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் சாட்சியாக கையொப்பம் பெற்றார்கள். கைப்பற்றுதல் மகசரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை-

நான் சம்பவத்தன்று மதியம் 12.50 மணிக்கு கருமத்தம்பட்டியில் உள்ள சென்னிஆண்டவர் கோவிலில் இருந்தேன். கோவிலுக்கு எதிர் திசையில் நின்று கொண்டிருநதேன். போலீசார் அப்போது கருப்பராயன் கோவிலுக்கு எதிர் பக்கத்தில் படம் வரைந்து எழுதி கொண்டிருந்தார்கள். போலீசார் நான் கடைக்கு சென்று நின்று கொண்டிருந்த பின்பு தான் அந்த இடத்துக்கு வந்தார்கள். அப்போது நேரம் மதியம் 01.00 மணி இருக்கும். சுமார்

அரைமணி நேரம் போலீசார் அந்த இடத்தில் இருந்தார்கள். போலீசார் என்னிடத்தில் இரண்டு கையொப்பம் பெற்றார்கள். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பதை நான் படித்து பார்க்கவில்லை. எனக்கு படிப்பு அறிவு இல்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி கையொப்பம் செய்தேன். இரண்டு போலீசார் சம்பவ இடத்துக்கு வந்தார்கள். போலிசார் காரில் தான் சம்பவ இடம் வந்தார்கள். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், சம்பவ இடத்தில் இல்லாமல் போலீசார் தயார் செய்து வைத்திருந்த பார்வை மகசரிலும், கைப்பற்றுதல் மகசரிலும், காவல்நிலையத்தில் வைத்து சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை-** இல்லை.